இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 29-06-2025

# தீர்மானம் போடத் தகுதி இருக்கிறதா?

1975ஆம் ஆண்டு அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டதை வைத்து கீழ்த்தரமான அரசியலைச் செய்கிறது பா.ஜ.க. அவசர நிலையின் போது உயிரிழந்தவர்களுக்கு இன்றைய ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியை விமர்சிப்பதற்கு பா.ஜ.க.வுக்கு இருக்கும் ஒரே ஆயுதம் இதுதான். இப்படித் தீர்மானம் போடுவதற்கான தகுதி, பா.ஜ.க.வுக்கு இருக்கிறதா?

“நாட்டில் கடந்த 1975 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட அவசர நிலையின் அடக்குமுறைகளால் உயிர்த்தியாகம் செய்தவர்களை ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூர்ந்து மரியாதை செலுத்த” பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவசர நிலையின் போது அரசமைப்புச் சட்டம் அளிக்கும் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு கற்பனை செய்ய முடியாத அடக்குமுறைகளுக்கு ஆளானவர்களுக்காக ஒன்றிய அமைச்சரவை இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தி இருக்கிறது.

கடந்த இரண்டு நாட்களாக பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், பா.ஜ.க. அமைச்சர்களும் ஜனநாயகக் காவலர்களாக, மக்களாட்சியின் காவலர்களாக, அரசியலமைப்புச் சட்டத்தின் காவலர்களாக மாறிக் காட்சி அளிக்கிறார்கள். இந்த வேஷம் அவர்களுக்கு ஒட்டவில்லை, பொருந்தவில்லை என்பதுதான் உண்மை.

இந்திய ஜனநாயக வரலாற்றில் இருண்ட காலம் என்றும், அரசமைப்பு மாண்புகள் கைவிடப்பட்டன என்றும், அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன என்றும், பத்திரிக்கைச் சுதந்திரம் முடக்கப்பட்டது என்றும், பலரும் கைது செய்யப்பட்டார்கள் என்றும், நாடாளுமன்றத்தின் குரல் முடக்கப்பட்டது என்றும், நீதிமன்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டன என்றும், ஏழை எளிய மக்கள் குறிவைக்கப்பட்டார்கள் என்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் மிக உருக்கமான பதிவை இட்டுள்ளார். இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்?

**மோடி பிரதமர் ஆனது முதல் இந்திய அரசியலமைப்புச் சட்டம்தான் அதிகமான தாக்குதலுக்கு உள்ளானது. இன்றைய கூட்டாட்சி இந்தியாவை ஒற்றைச் சர்வாதிகார நாடாக மாற்றுவதற்கு ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ திட்டத்தை மோடி கொண்டு வருகிறார். அவர்கள் நினைத்ததைப் போன்ற தனித்த பெரும்பான்மை உள்ள வெற்றியை பா.ஜ.க. பெற்றிருந்தால் இந்நேரம் அவர்களது ஆட்டத்தை இந்தியா பார்த்திருக்கும். நிதிஷ்குமார் தயவில், சந்திரபாபு தயவில் ஆட்சி நடத்துவதால் தான் அடக்கி வாசிக்கிறது பா.ஜ.க.. ‘நாங்கள் 400 இடங்களை அடைய நினைப்பது இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்காகத்தான்’ என்று பா.ஜ.க. எம்.பி.ஒருவர் தேர்தல் நேரத்தில் சொன்னார்.**

**இந்திய நாடாளுமன்றத்தில் ஏதாவது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினை குறித்து பா.ஜ.க. விவாதம் நடத்தி இருக்கிறதா? சாதாரண விவாதத்தின் போதாவது பிரதமர் கலந்து கொண்டு பதில் சொல்லி இருக்கிறாரா? தான் உரையாற்றும் நாளை தவிர வேறு நாளில் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து அமர்ந்து பதில் அளித்துள்ளாரா பிரதமர்? இந்தியாவின் எந்தப் பிரச்சினைக்காவது அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி பிரதமர் நேரடியாக கருத்துக் கேட்டுள்ளாரா? நாடாளுமன்றத்துக்கோ ஜனநாயக அமைப்புகளுக்கோ அவர் என்றாவது மரியாதை தந்துள்ளாரா?**

இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் ஆகும். மாநிலங்கள் அனைத்தும் நிதி நெருக்கடியில் இருக்கின்றன. அவற்றின் நிதி உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு விட்டன. ஒன்றியப் பட்டியல் - மாநிலப்பட்டியல் - பொதுப்பட்டியல் என அரசியலமைப்புச் சட்ட அதிகாரங்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பொதுப்பட்டியலை அபகரித்து விட்டார்கள். மாநிலப் பட்டியலை ஆக்கிரமித்து விட்டார்கள். இவர்கள் அரசியலமைப்புச் சட்ட மாண்பைப் பற்றி பேசலாமா?

மாநிலங்கள் மீது படையெடுப்பு, மாநில மொழிகள் அழிப்பு, தேசிய இனங்களின் அடையாளங்கள் அழிப்பு - இவைதான் இன்றைய பா.ஜ.க. அரசின் கொள்கை ஆகும். காஷ்மீர் என்ற மாநிலம் சிதைதக்கப்பட்டு சின்னாபின்னம் ஆனது. சட்ட ரீதியாகவே செய்தார்கள். மணிப்பூர் பற்றி எரிகிறது. எரிய விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுபான்மை மக்கள் பீதியில் வாழ்கிறார்கள். கலவரம் செய்ய ஒரு காரணம் கிடைத்தால் போதும். வெறுப்புப் பேச்சுகளின் புகலிடமாக பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் இருக்கின்றன. உச்சநீதிமன்றமே பல முறை இதனைக் கண்டித்திருக்கிறது.

உச்சநீதிமன்றம், பா.ஜ.க. ஆட்சியாளர்களால் என்னவாக மதிக்கப்படுகிறது என்பதை விளக்கத் தேவையில்லை. தேர்தல் ஆணையர் தேர்வில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியைப் புறக்கணித்தது இந்தியாவின் நீதித்துறை மீதான மாபெரும் அச்சுறுத்தல் அல்லவா?

**வாக்குறுதிகள் எவற்றையும் எதையும் நிறைவேற்றாமல், அப்பாவி மக்கள் மீது அனைத்துச் சுமைகளையும் வைத்துள்ளது மோடி அரசு. பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கார்ப்பரேட் நிறுவனங்களின் கடன்கள் ஒரே நாளில் ரத்து செய்யப்படுகின்றன. கடன் வாங்கியவர்கள் தப்ப வைக்கப்படுகிறார்கள். இது யாருக்கான ஆட்சி என்பதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை.**

இப்படி ஒரு பாசிச ஆட்சியை நடத்தி வரும் பா.ஜ.க., மிசா காலத்துக்காக கண்ணீர் விடுவது கேவலமானது. ‘மிசாவில் கைதான தி.மு.க., காங்கிரசோடு கூட்டணி அமைக்கலாமா?’ என்ற கேள்வியை இவர்கள் எழுப்புகிறார்கள். 23.1.1978 அன்று வடமாநிலத்தில் உரையாற்றிய பிரதமர் இந்திரா அவர்கள், மிசா சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக மன்னிப்புக் கேட்டார். ரேபரேலி தொகுதி பொதுக்கூட்டத்திலும் மன்னிப்பு கேட்டார். 1979 செப்டம்பர் 30 அன்று சென்னையில் உரையாற்றிய பிரதமர் இந்திரா அவர்கள், ‘நாங்கள் செய்த தவறுகளுக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்’ என்றார். இவை எல்லாம் வரலாறு.

பதினோரு ஆண்டுகளாக அறிவிக்கப்படாத அவசர நிலையை நடத்தி வரும் பா.ஜ.க. தலைமை எத்தனை தடவைகள் மன்னிப்புக் கேட்கப் போகிறது?



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.6.2025) முகாம் அலுவலகத்தில், கழகத்தின் வில்லிவாக்கம் கிழக்கு பகுதியின் 98‘அ’ வட்ட செயலாளர் சி.தேவராஜ் அவர்களின் மகள் மீனா – அபிஷேக் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.6.2025) தனது புகைப்படக் கலைஞர் இரா.குட்டி (எ) ஞானசாஸ்தா – ஆ.சுஜி இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் நாடளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், எ.எம்.வி.பிரபாகர ராஜா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் நா.இளையராஜா மற்றும் மணமக்களின் உறவினர்கள் உடனிருந்தனர்.

## நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் பணிகள் குறித்த கூட்டம்!

# சாலையின் தரத்தினை பல்வேறு கட்டங்களில் தரக்கட்டுப்பாடு ஆய்வு செய்ய வேண்டும்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவுரை!

சென்னை, ஜூன் 29-

நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர்களின் பணிகள் தொடர்பாக. பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (27.06.2025) பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்களின் பணிகள் குறித்து ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்.



இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறையைச் சார்ந்த அனைத்து தலைமைப் பொறியாளர்களும் கலந்து கொண்டனர். தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்களுடன் தலைமையிடத்தில் மாதம் ஒருமுறை பணி முன்னேற்றம், விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் கோப்புகள், நிலஎடுப்பு, நீதிமன்ற வழக்குகள் போன்ற முக்கியப் பணிகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தலைமைப் பொறியாளர்கள் ஆய்வு கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுடன், கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆய்வு நடத்த வேண்டும். அதேபோன்று, கோட் டப் பொறியாளர்களும் சம்மந்தப்பட்ட களப்பொறியாளர்களுடன் தணிக்கை நாள் ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டும். இதனை கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆய்வு நடைபெறுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், தலைமைப் பொறியாளர் ஒரு மாதத்தில், குறைந்தப்பட்சம் 10 நாட்களுக்கு களஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார்.

வேலை தளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதாவது, சாலைகள் குறுக்கே பாலங்கள் கட்டும்போது, போதிய தடுப்புகள் (Barricades) வலிமையாக அமைக்கப்பட வேண்டும். இரவில், ஒளிரும் ஸ்ட்டிக்கர்(Sticker) மற்றும் ஒளிரும் பிரதிபலிப்புப் பதாகைகள் வைக்கப்பட வேண்டும். கவனக் குறைவு மற்றும் கடமையில் அலட்சியமாக செயல்பட்டால், சம்மந்தப்பட்ட பொறியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

சாலையின் தரத்தினை பல்வேறு கட்டங்களில், தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், முத்திரைத் திட்டங்கள் (Iconic Scheme) குறித்து, 15 நாட்களுக்கு ஒருமுறை அரசுக்கும், செயலாளர் அவர்களுக்கும் பணியின் முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை வரை உயர்மட்டப் பாலம், மதுரை அப்போலோ பாலம், மதுரை இராஜாஜி சந்திப்பு அருகே பாலம் போன்ற முக்கியமான பணிகளை தனிக் கவனம் செலுத்தி விரைந்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

புறவழிச் சாலைகள் அமைக்க அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டும், சில புறவழிச்சாலைப் பணிகள் நிறைவுபெறாமல் உள்ளது. இதில், தலைமைப் பொறியாளர்கள் உரிய கவனம் செலுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

சாலை உபகரணங்கள், IRC விதி முறைகளுக்குட்பட்டு, தேவையான இடங்களில் மட்டும் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்திய அமைச்சர் அவர்கள், சாலை இருபுறமும் படர்ந்துள்ள முட்புதர்களை அகற்ற வேண்டுமென்றும், பள்ளமில்லா சாலைகளாகப் பராமரிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

சாலையில் மையத் தடுப்பான்(Center Median) அருகே மண் குவியல்கள் உடனுக்குடன் அகற்றப்பட்டு, நடைமேடையில் ஏதேனும் குறையிருந்தால் அவ்வப்போது பார்வையிட்டு, சீரமைக்கப்பட வேண்டும். இப்பணிகள் அனைத்தும் 30.7.2025க்குள் முடிக்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ் பங்குப் பெற்றார்.



திருப்பூர் மத்திய மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மகள், திருப்பூர் வடக்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் செ.திலகராஜ் சகோதரி செ.செந்தமிழ் – சா.யோகேஸ் கண்ணா திருமணம் அண்மையில் நடைபெற்றது. பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மணமக்களுக்கு நேரில் சென்று வாழ்த்துக் கூறினார். உடன் திருப்பூர் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் நா.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட குடும்ப நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் உள்ளனர்.



சென்னை, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் நேற்று (27.06.2025), உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் 2025ஆம் கல்வியாண்டு பொறியியல் சேர்க்கைக்கான, தரவரிசை பட்டியலினை வெளியிட்டார். உடன் உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா ஆகியோர் உள்ளனர்.